-----------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் போதிய கணக்கீட்டுக் கொள்கைகளிற்கு உரித்தான தகவல்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கு உரித்தான குறிப்புகளை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் மூலம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ள ரூபா 5,469,574 பெறுமதியான 7,500 லீற்றர் ஒயில் ஸ்பில் டிஸ்பேர்ஸன்ட் இருப்பு 2023 மார்ச் 23 ஆம் திகதி வரையில் காலாவதியாகி இருந்ததுடன் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 09 இன் 38 ஆம் பந்தியில் பிரகாரம் அப் | இவ் இருப்பு பயன்படுத்தப்படுவது தொடர்பாக நிபுணத்துவம் வாய்ந்த நபர்களின் அறிவுரைகள் பெறப்பட்டு அழிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதியைப் பதிவழிப்பதற்குப் பதிலாக இருப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் இருப்பும் இலாபமும் கூட்டிக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மூலதனச் செயற்திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டிற்காகப் பெறப்பட்ட மற்றும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு மேலும் செலுத்தப்பட வேணண்டியிருந்த ரூபா 13,834,233 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 11 இன் 50 ஆம் பந்தியின் படி, ஒரு பொறுப்பாக அங்கீகரிக்கப்படாது நடைமுறையில் உள்ள வேலையாக திரண்ட நிதியின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 11 இன் 44 முதல் 49 வரையான பந்திகளின் படி பரிவர்த்தனை அல்லாத பரிமாற்றப்படாத கொடுக்கல்வாங்கல்களில் இருந்தான வருமானத்தை இனங்கண்டு அளவிட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது பெறப்பட்டிருந்த ரூபா 30,871,230 மூலதன மானியத் தொகையில் ரூபா 10,158,619 தொடர்பாகவும் 2021 ஆம் 2022 ஆம் ஆண்டுகளில் ஆய்வுகூடச் செயற்திட்டத்திற்காக வெளிநாட்டு அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 14,182,487 தொகை தொடர்பாகவும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டு முதல் நிதிக் கூற்றுக்களில் சீராக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | முன்னைய ஆண்டின் போது பெறப்பட்டிருந்த மூலதன மானியம் தொடர்பாக மேற்குறித்த நியமத்தின் 116 முதல் 123 வரையான இடைநிலை ஏற்பாடுகளுக்கு அமைவாகச் செயற்பட்டிராமையால் மேலும் வருமானமாக இனங்காணப்பட வேண்டிய ரூபா 158,722,279 | 2024 ஆம் ஆண்டு முதல் நிதிக் கூற்றுக்களில் சீராக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகையான பிற்போடப்பட்ட மூலதன மானியமாக திரண்ட நிதியத்தில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (உ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 19 இன் 61 ஆம் பந்தியின் பிரகாரம் ஊழியர்களின் பின்னய நலன் திட்டமாக, ஊழியர் பணிக்கொடைக்கான ஒதுக்கம் ஆயுட் கணிப்பீட்டு நுட்பமுறையைப் பயன்படுத்தி நிர்ணயிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நிர்ணயிக்கப்படாது அதிகாரசபையின் 170 ஊழியர்களுக்காக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பணிக்கொடையாக ரூபா 37,115,913 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023.12.31 இல் உள்ளவாறு உண்மையாகக் கடமைகளில் ஈடுபட்ட ஒரு வருடத்திற்கு மேலான சேவைக்காலத்துடன் சகல உத்தியோகத்தர்களுக்காகவும் பணிக்கொடைத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | MV X Press Pearl கப்பல் அனர்த்தம் தொடர்பாக கடமைகளில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களுக்கு மேலதிகக் கொடுப்பனவாக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 62,196,986 தொகையை ஒதுக்கியிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 17,991,433 தொகை செலுத்தப்பட்டு மேலும் ரூபா 7,292,931 தொகையான கொடுப்பனவுகளை மேற்கொள்ள இருந்த போதிலும் ஆண்டின் இறுதியில் கணக்குகளில் செலுத்தப்பட வேண்டிய செலவினமாக ரூபா 44,205,553 தொகை காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 36,912,622 தொகையான மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கப்பல் காப்புறுதிக் கம்பனியுடன் கலந்துரையாடி விசேட கடமைகளிற்காக உத்தியோகத்தர்களின் கடமை நிலையின் படி, நாளொன்றிற்கு செலுத்தப்பட்ட தொகை ரூபா 117 அ.டொ. முதல் 22.5 அ.டொ. களாகும். இவ்வாறு அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட்ட தொகையில் விசேட கடமைகளில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களிற்காக நாளொன்றிற்கு 20% மும் விடுமுறை நாளொன்றிற்கு 30% முமாகச் செலுத்தப்படுவதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு அதிகாரசபையின் நிர்வாக அதிகாரிகள் தீர்மானித்து இத் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. | நிலவும் சாட்சிகளின் படி நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதியைக் காண்பிப்பதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 02 மென்பொருள் செயற்திட்டங்களுக்காக தென்மாகாண அலுவலகத்தின் சீசீடீவீ முறைமையைத் | நிர்வாகப் பிரிவால் ரூபா 30,250 தொகை தென்மாகாண அலுவலகத்தின் சீசீடீவீ | செலுத்தப்பட்ட முற்பணத் தொகை சரியாகக் கணக்கீடு செய்யப்படுவதற்கான |

| | | | |
|---|---|---|---|
| | திருத்துவதற்காக முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,005,250 முற்பணத்தொகை கணக்கீடு செய்யப்படுவதற்குப் பதிலாக நிலையான சொத்துப் பதிவேட்டிற்கு உள்ளடக்கப்பட்டு மூலதனமாக்கப்பட்டிருந்தது. | முறைமையைத் திருத்த வேலைகளுக்காக தனியார் நிறுவகம் ஒன்றிற்கு செலுத்தப்படுவதற்கு இனங்காணப்பட்டு கணக்கிடப்பட்டு 2022 ஆம் ஆண்டின் நடைமுறை வேலைக் கணக்கு மீதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2024 ஆம் ஆண்டில் ஓய்வு பெறுவதற்குள்ள 3 உத்தியோகத்தர்களுக்கு உரித்தான ரூபா 1,799,923 கூட்டுத்தொகையான பணிக்கொடை ஒதுக்கமும் 2023 ஆம் ஆண்டின் போது கேட்டு விலகியிருந்த 3 உத்தியோகத்தர்களுக்கு உரித்தான 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் செலுத்தப்பட்டிராத ரூபா 608,915 தொகையான பணிக்கொடைத் தொகையுமாக ரூபா 2,408,838 தொகை நீண்டகாலப் பொறுப்புகளில் இருந்து அகற்றப்பட்டு நடைமுறைப் பொறுப்பாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புகளுடன் நான் உடன்படுகின்றேன். எதிர்காலத்தில் கணக்காய்வுப் பரிந்துரைப்பின் படி நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படும். | நடைமுறையல்லாப் பொறுப்புகளும் நடைமுறைப் பொறுப்புகளும் சரியாக இனங்காணப்பட்டு சீராக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மிரிஸ்ஸ மீன்பிடிச் செயற்திட்டத்திற்காக அதிகாரசபையால் உசாவுகைச் சேவைகள் வழங்கப்படுவதற்கு உரித்தாக பொறியியல் செயற்பாடுகள் தொடர்பாக மத்திய உசாவுகைப் பணியகத்திடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,945,847 தொகை கணக்கீடு செய்யப்பட்டிராமையால் நிதிக்கூற்றுக்களில் வருமானம் மற்றும் பெறவேண்டிய தொகை குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கண்காய்வு அவதானிப்புகளுடன் இணங்குகின்றேன். இத் தொகை 2024 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சமர்ப்பிக்கப்படும். | பெறவேண்டிய பணம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2018 மார்ச் 30 ஆம் திகதி அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்த காலி அலுவலகக் கட்டிடத்திற்காக “Design & Build” அடிப்படையில் நிர்மாணிப்பு வேலைகள் மேற்கொண்ட பொறியியல் பணி தொடர்பான மத்திய உசாவுகைப் | கணக்காய்வு அவதானிப்புடன் உடன்படுகின்றேன். இக் கூடுதல் ஒதுக்கீடு 2024 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சீராக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | ஒப்பந்தத்திற்கு உரித்தான சரியான பிடிமானத் தொகை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |

பணியகத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய பிடிமானப் பணத்தொகை ரூபா 5,660,215 ஆன போதிலும் இது ரூபா 12,636,098 ஆக ரூபா 6,975,883 கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| விடயம் | நிதிக்கூற்றுக் களின் பிரகாரம் பெறுமதி | தொடர்புடைய அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| ஆய்வுகூட வருமானம், அனுமதிப்பத்திர வழங்கல், புதப்பித்தல், விண்ணப்பக் கட்டணங்கள், தண்டப்பண வருமானம் | 26,891,126 | 28,376,522 | 1,485,396 | கணக்காய்வு அவதானிப்புகளின் படி, நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட பெறுமதி ரூபா 28,376,522 ஆகும். | வருமானம் சேகரிக்கப்படும் பிரிவும் உப அலுவலகங்களில் இருந்து பெறப்பட்ட தகவல்கள், நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட பெறுமதியுடன் ஒப்பிடப்பட்டு வேறுபாட்டிற்கான காரணம் அறியப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| ஆதன இயந்திர உபகரணங்கள் | 168,357,986 | ஒவ்வொரு சொத்து விடயமும் கையேற்கப்பட்ட திகதி இனங்காணப்படக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட சொத்துப் பதிவேடு மற்றும் சொத்து மெய்மையாய்வு அறிக்கை | கணக்காய்வு அவதானிப்புடன் உடன்படுகின்றேன். 2024 ஆம் ஆண்டு முதல் விடயங்களை வெவ்வேறாகக் காண்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிலையான சொத்துப் பதிவேட்டில் சொத்துக்கள் கையேற்கப்பட்ட திகதியுடன் விடய ரீதியாகக் காண்பித்து நடைமுறையல்லாத சொத்துப் பெறுமதியின் சரியான நிலை குறித்தும் உறுதிப்படுத்தப்படக் கூடிய வகையில் தயாரிக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 104,809,962 தொகையான செலுத்த வேண்டிய மீதியில் நிலவிய 5 | செலுத்தப்பட வேண்டிய தொகை பரீட்சிக்கப்பட்டு 2024 ஆம் ஆண்டின் | செலுத்தப்பட வேண்டிய மீதிகளின் துல்லியத்தன்மையை |

| | | |
|---|---|---|
| ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 12,636,097 தொகையும், 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 3,006,832 தொகையும், 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 1,757,365 தொகையும் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்குகளில் சீராக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | ஆராய்ந்தறிந்து தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை<br><br>ரூபா | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2023 பெப்ரவரி 27 ஆம் திகதிய இல. அமப/23/0386/605/012-1 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் | அதிகாரசபையின் பொது முகாமையாளரின் பதவி வெளிவாரியாகவும், ஏனைய பிரிவுகளின் 05 முகாமைத்துவப் பதவிகளுக்காக உள்ளக ரீதியாகவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காகவும், அவ்வாறில்லாத விடத்து அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட திருத்தத்தை மேற்கொள்ளுமாறும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு செயற்படாது சட்ட முகாமையாளர் உள்ளடங்கலாக 04 முகாமைத்துவப் பதவிகள் வெளிவாரி அடிப்படையிலும், பொது முகாமையாளரின் பதவி 2 ½ ஆண்டுகள் பதில்கடமை ஆற்றிய உத்தியோகத்தருக்கு உள்ளக ரீதியாகவும் 2024 ஏப்ரல் 23 ஆம் திகதி முதல் நிலையான அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. | அதிகாரசபையில் வெற்றிட நிலையில் உள்ள சிரேஷ்ட முகாமைத்துவப் பதவிக்கான ஆட்சேர்ப்பிற்காக அரச சேவையின் ஆட்சேர்ப்பு நடைமுறை மீளாய்வின் அமைச்சரவை உத்தியோகத்தர் குழுவிற்கு 2023.01.11 கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இதன் படி, குழுவால் பரிந்துரை வழங்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளரால் எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய பீஈடீ/01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகளின் செயற்பாட்டுக் கைநூல் | | | |
| (i) | 3.6 ஆம் பந்தி | பணிப்பாளர் சபையால் மூலோபாயத் திட்டத்தையும் செயற்பாட்டுத் திட்டத்தையும் அடிப்படையாகக் கொண்டு ஆக்கபூர்வமான செயலாற்றல் மதிப்பீட்டு முறைமை ஒன்று அதிகாரசபைக்கு அறிமுகப்படுத்தியிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டு முடிவடைய முன்னர் ஆக்கபூர்வமான செயலாற்றல் முறைமை ஒன்று அதிகாரசபையால் அறிமுகப்படுத்தப்படும். | ஆக்கபூர்வமான செயலாற்றல் முறைமை ஒன்று அறிமுகப்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 6.7 ஆம் பந்தி | மீளாய்வாண்டின் இறுதியில் நிலவிய நிலையான சொத்துக்கள் மற்றும் களஞ்சியப் பொருட்கள் மெய்மையாய்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் போது பொருள் மெய்மையாய்வுக் குழு ஒன்று நியமிக்கப்பட்டு அமைச்சின் பிரதிநிதி ஒருவரை நியமித்துக் கொள்வதற்கு அமைச்சின் செயலாளருக்கு ஓர் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதனை அடுத்து ஒரு மாதத்திற்குள் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்படும். | நிலையான சொத்துக்களும் களஞ்சியப் பொருட்களும் மெய்மையாய்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2008 இன் 35 ஆம் இலக்க கடல் மாசடைதலை தடுப்பதற்கான அதிகாரச்சட்டத்தின் 10(1) மற்றும் (2) ஆம் உப பிரிவு | உப பிரிவு 10(1) இன் படி, உத்தரவைச் செயற்படுத்தத் தவறியமையால் 10 (2) உப பிரிவைச் செயற்படுத்த இயலாது கடல் மாசடைவைத் தடுப்பதற்கு, குறைப்பதற்கு, கட்டுப்படுத்துவதற்கு அல்லது நிறுத்துவதற்கு தவறியதற்காக அபராதங்களை வசூலிப்பதற்கான வாய்ப்புகள் இழக்கப்பட்டிருந்தன. | நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைகளைச் செயற்படுத்துவதற்கான அதிகாரம் அதிகாரசபைக்கு உள்ளதுடன் குறித்த வகையில் செயற்படும் சந்தர்ப்பங்களின் போது நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக கட்டளையிடப்பட்டுள்ளது. | அதிகாரச்சட்டத்தின் படி, நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2008 இன் 35 ஆம் இலக்க கடல் மாசடைதலை தடுப்பதற்கான அதிகாரச்சட்டத்தின் 17 (7) ஆம் பிரிவு | கடல் மாசடைதலை தடுத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் தொடர்பாக அதிகாரசபை அவசியமாகக் கருதும் நிபுணத்துவ அறிவைக் கொண்ட வெளித்தரப்பினரின் அறிவைப் பெற்றுக்கொள்ள இயலுமான போதிலும் அத்தகைய நிபுணத்துவ உதவியாளர்களது உதவியைப் பெறாமையால் சர்வதேச ரீதியாக நிலவும் நிர்ணய விதிகளின் படி இச் செயற்பாட்டை நீண்டகாலமாக மேற்கொள்கையில் ஏற்படும் சுற்றாடல் தேவைப்பாடு, கரையோர நிலைபேற்றுத் தன்மைக்கு ஏற்படும் தாக்கம் மற்றும் மேலும் தொடர்ந்து இச் செயற்பாட்டை எவ்வளவு காலத்திற்கு மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்து தீர்மானிக்காது காப்புறுதிக் கம்பனியின் இணக்கப்பாட்டையும் பெறாது கரையோரத்தில் பிளாஸ்டிக் துகள்களின் சேகரிப்பு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், 2021 ஒக்டோபர் முதல் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை சமூகப் பங்களிப்பில் 4 மாவட்டங்களில் கரையோர வலயங்களில் பிளாஸ்டிக் துகள்களின் சேகரிப்பில் ஈடுபடும் 158 பேருக்காக ரூபா 20,116,500 தொகையான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இரு சர்வதேச நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் கடற்கரையைச் சுத்திகரிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டு பின்னர் நிலவிய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு அந் நிபுணத்துவ உதவி தேவையற்றமையால் அவர்கள் அந் நடவடிக்கைகளில் இருந்து விலகிக்கொண்டனர். கடற்கரைக்கு கழிவுகள் பல்வேறு சுற்றுச் சூழல் நிலைமைகளுக்கு ஏற்ப மாறுபட்டு அவ்வப்போது கடலின் அடிப்பகுதியில் உள்ள நீரில் உள்ள கப்பலில் இருந்து அகற்றப்பட்ட கழிவுப்பொருட்கள் கடலோர மண்டலத்திற்கு வந்தடைகின்றன. அவ்வாறு நிகழும் வரை கடற்கரையை சுத்திகரித்தல் வேண்டும். அதற்கான கொடுப்பனவுகளும் குறித்த கப்பலின் காப்புறுதிக் கம்பனியால் மேற்கொள்ளப்பட வேண்டும். கரையோரம் தேவைக்கேற்ற வகையில் சுத்திகரிக்கப்பட்டதை அடுத்து இரு தரப்பினருக்கிடையே பேச்சுவார்த்தையின் மூலம் கரையோரச் சுத்திகரிப்பு நிறுத்தப்படும். | அதிகாரசபை அவசியம் என கருதப்படும் நிபுணத்துவ அறிவைக் கொண்ட வெளிவாரியினரின் அறிவைப் பெற்று இச் செயற்பாட்டை நீண்ட காலமாக மேற்கொள்வதில் உள்ள சுற்றாடல் தேவைப்பாடு, கரையோர நிலைபேற்றுத் தன்மைக்கு ஏற்படும் தாக்கம் மற்றும் மேலும் இச் செயற்பாட்டை எவ்வளவு காலத்திற்கு மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்து தீர்மானிப்பதற்கும் 2 வருடத்திற்கும் மேலான காலமாக தொடர்ந்து சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த குடிமக்களின் சேவையைப் பெற்றுக்கொள்கையில் அக் குடிமக்களின் சேவைத் தேவைப்பாட்டை செயலாற்றல் அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 87,501,471 தொகையான மிகையானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 209,250,750 தொகையாகும். இதன்

படி, நிதி விளைவுகளில் ரூபா 121,749,279 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ் வீழ்ச்சிக்கு வருமானம் ரூபா 216,812,805 ஆல் குறைந்தமை பிரதான காரணமாகியது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | MV - X Press pearl கப்பல் அன்ர்த்தத்தின் மூலம் கடல் சுற்றுச் சூழல் முறைமைக்கு ஏற்பட்ட தாக்கம் காரணமாக இறந்த ஆமைகள் மற்றும் கடல் முலையூட்டிகளின் உடல்கள் எதிர்வரும் ஆய்வுகளை முன்னிட்டு யேசுயு வளாகத்தில் வைக்கப்பட்டுள்ள அதி குளிரூட்டி கொள்கலனில் 2021 ஆகஸ்ட் முதல் 2023 மார்ச் வரை களஞ்சியப்படுத்தப்படுவதற்கான வாடகையாகவும் மின்சாரக் கட்டணத்திற்காகவும் ரூபா 1,966,007 தொகை வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களத்தால் செலுத்தப்பட்டிருந்ததுடன் அத் தொகை மீள அந் நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டு காப்புறுதி நிறுவனத்திடமிருந்து மீளளிப்புச் செய்து கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2023 யூன் 07 ஆம் திகதிய இல. 52/2023 ஆம் இலக்க பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் படி அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் தினம் வரையிலும் அதன் படி, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இக் கொடுப்பனவு தொடர்பான தகவல் காப்புறுதிக் கம்பனிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும் அது சுற்றாடல் பாதிப்பு மதிப்பீட்டு அறிக்கையில் சேர்க்கப்பட்டு ஏற்ற வகையில் கொடுப்பனவை மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. இந் நடவடிக்கைக்காக செலவிடப்படுவதற்கு இவ் அதிகாரசபைக்கு ஏற்பாடு இன்மையால் வரிசை அமைச்சின் செயலாளர் மூலமும் இக் கொடுப்பனவை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. தேவையான பணத்தைத் தரும்படி திறைசேரியிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அதிகாரசபையால் 2017 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை அச்சிடப்பட்ட ரூபா 586,713 கிரயமான சிங்கள மற்றும் தமிழ் சஞ்சிகைகள் 3,110 உம் ரூபா 123,096 கிரயமான சமுத்திர பத்திரிகைகள் 15,387 உம் பகிர்ந்தளிக்கப்படாது களஞ்சியத்தில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது. | | தற்போது எஞ்சியுள்ள பிரதிகள் எதிர்காலத்தில் நடாத்தப்படும் கண்காட்சிகளிற்காகப் பயன்படுத்தப்பட உள்ளதுடன் மீள அச்சிடப்பட மாட்டாது. |
| (இ) | MV - X Press pearl கப்பல் அன்ர்த்தம் தொடர்பான இழப்பை மதிப்பிடுவதற்காக நியமிக்கப்பட்ட நிபுணத்துவக் குழுவிற்குச் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவின் அளவைத் | தேசிய சம்பள ஆணைக்குழுவின் பிரதிநிதி இக் குழுவில் பங்கேற்க மாட்டார் என செயலாளருக்கு அறிவித்திருந்ததுடன் மற்றைய உறுப்பினர்களுடன் குழு | நிபுணத்துவக் குழு அங்கத்தவர்கள் கடமையில் ஈடுபட்ட |

| | | | |
|---|---|---|---|
| | தீர்மானிப்பதற்காக 2023 சனவரி 30 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் படி 5 பேர் அடங்கிய குழுவின் மூலம் நாளொன்றிற்கு 8 மணித்தியாங்களிற்காக அ.டொ. 350 படி 584,500 அ.டொ. கள் நிபுணத்துவக் குழுவிற்குச் செலுத்தப்படுவதற்கு அக்குழுவிற்கு பெயரிடப்பட்டிருந்த தேசிய சம்பள ஆணைக்குழு உத்தியோகத்தரின் பரிந்துரை பெறப்படாது தீர்மானிக்கப்பட்டிருந்தது. இவ்வாறே, நிபுணத்துவக் குழுவின் அங்கத்தவர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்ட காலத்தை அளவிடுவதற்காகவும், பரிந்துரைக்கப்பட்ட அக் கட்டணங்கள் சர்வதேசக் கட்டணமாக உறுதிப்படுத்துவதற்காகவும் எந்த வித சான்றுகளும் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் 2023 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியின் போது நிபுணத்துவக் குழுவிற்குச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 6,475,000தொகையான கொடுப்பனவு கணக்கிடப்பட்ட விதம் குறித்தும் கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு குழு தீர்மானித்து குழு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சர்வதேச நிறுவகத்தால் இத்தகைய நடவடிக்கைக்காக செலுத்தப்படும் கட்டண அளவைக் கருத்திற்கொண்டு 8 மணித்தியாங்களிற்காக அ.டொ. 350 படி செலுத்தப்படுவதற்கு சுற்றாடல் பாதிப்பு மதிப்பீட்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட கட்டண தீர்மானிப்புக் குழுவின் தீர்மானமாக 8 மணித்தியாங்களிற்காக நாளொன்றிற்கு ரூபா 30,000 தொகை செலுத்த வேண்டியதாகக் காணப்பட்டது. ஒவ்வொரு நிபுணத்துவக் குழு அங்கத்தவருக்கும் செலுத்தப்பட வேண்டிய தொகையில் 25% மாத்திரம் செலுத்தப்பட்டு எஞ்சிய நட்டஈட்டுத்தொகை கிடைக்கப்பெற்றதை அடுத்து செலுத்தப்படுவதற்குமாகும். பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தில் இது வரையில் அடிப்படைக் கொடுப்பனவு மாத்திரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. முழுமையான கொடுப்பனவிற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படுவதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் கட்டண அளவைத் தீர்மானிப்பதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரையைச் செயற்படுத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது. | நேரத்தை அளவிடுவதற்கும் , பரிந்துரைக்கப்பட்ட கட்டணங்கள் சர்வதேச கட்டணமாக உறுதிப்படுத்துவதற்காகவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | சமூகப் பங்கேற்புடன் MV - X Press Pearl கப்பலில் இருந்து சிதறிய துகள்களைச் சேகரிப்பதற்காக 2021 ஒக்டோபர் மாதம் முதல் 2023 திசெம்பர் வரை கொடுப்பனவாக ரூபா 248,192,250 தொகையும் உபகரணங்கள், போக்குவரத்து, உணவு மற்றும் ஏனைய செலவினமாக ரூபா 553,824,237 தொகையுமாக செலவினம் | பிளாஸ்டிக் துகள்கள் சிறிய அளவில் காணப்பட்ட போதிலும் கடற்கரையில் அதிகளவில் சிதறியுள்ளதன் காரணமாக கருத்திற்கொள்ளப்பட வேண்டிய அளவு கடற்கரையோரச் சுத்திகரிப்பாளர்களின் அளவை ஈடுபடுத்த வேண்டியுள்ளது. இதன் படி மேலும் 140 பேர் | சமூகத்தினரின் சேவையைப் பெற்றுக்கொள்கையில் அச் சமூகத்தின் சேவைத் தேவைப்பாட்டை செயன்முறை அடிப்படையில் |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டிருந்தது. நாளாந்தம் சேகரிக்கப்படும் மொத்த துகள்களின் அளவின் சாதாரண அளவு 2022 உடன் ஒப்பிடுகையில் கி.கி.44 முதல் 2023 ஆம் ஆண்டளவில் கி.கி.20 இற்குக் கிட்டிய அளவாகக் குறைவடைந்திருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் 4ழுகப் பங்களிப்பிற்காக ஏற்கப்பட்ட கிரயத்தில் குறைவு ரூபா 124 மில்லியனில் இருந்து ரூபா 106 மில்லியன் வரையான ரூபா 18 மில்லியன் ஆக மாத்திரம் காணப்பட்டது. | அளவிலான கரையோரச் சுத்திகரிப்பாளர்கள் தேவைப்பட்டுள்ளனர். குறிப்பிடத்தக்க அளவு ஊழியர்களைக் குறைக்கும் இயலுமை இன்மையால் சகூகப் பங்களிப்பிற்காக ஏற்படும் செலவினத்தில் தெளிவான குறைவொன்றை அவதானிக்க முடியாதுள்ளது. 2021 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை அதிகரிப்பின் காரணமாக 2022 ஆம் ஆண்டின் போது கரையோரச் சுத்திகரிப்பாளர்களின் எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்ட போதிலும் அந்த அளவிற்கு ஏற்ற வகையில் செலவினம் குறைவடையவில்லை. | முறையான நடைமுறைக்கமைவாக கண்காணித்து சேவையில் ஈடுபடுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2020 ஆம் ஆண்டில் ரூபா 750,000 இற்கு கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரசபையின் வலையமைப்பு விருத்திச் செயற்திட்டம் 2020 யூலை 30 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 3 வருடங்களுக்கு மேலான காலம் கடந்திருந்த போதிலும் அதன் முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டு பணியை மேற்கொண்டு செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரசபையின் வலையமைப்பைத் தயாரிப்பதற்காக உடன்பட்ட வகையில் 2020 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட இயலாது போயிருந்தது. எவ்வாறெனினும், இது வரையில் வலையமைப்பு விருத்தி இறுதிக் கட்டத்தில் உள்ளது. | செயற்திட்டத்தை விரைவாகப் பூர்த்தி செய்து கொள்வதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 சர்ச்சைக்குரிய தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| MV X Press Perl கப்பல் அனர்த்தத்திற்கு உரித்தாக இலங்கையால் (அதிகாரசபை மற்றும் ஏனைய நிறுவனங்கள் உள்ளடங்கலாக) ஏற்கப்பட்ட செலவினங்களுக்காக 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு உரித்தாக 17 சந்தர்ப்பங்களின் போது மீளளிப்பிற்காக கப்பல் காப்புறுதி நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த அ.டொ. 50.4 மில்லியனில் அ.டொ. 14.6 மில்லியனும் ரூபா 931.8 | அதிகாரசபையால் கடற்கரையோரச் சுத்திகரிப்பு நடவடிக்கைகளை மீனவ சமூகத்தைப் பயன்படுத்தி மேற்கொள்வதுடன் இதற்காகச் செலவிடப்படும் செலவினம் இது வரையில் உடன்பட்ட விலைகளுக்கு அமைவாக காப்புறுதிக் கம்பனியின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. அதிகாரசபையால் ஒரு மாதம் அல்லது இரு மாதங்களுக்கு செலவிடப்படும் தொகைக்கு உரித்தாக உள்ள தொகை | நிராகரிப்புகளைக் கருத்திற் கொண்டு எதிர்காலத்தில் மீளளிப்பிற்காக கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகையில் உரிய கவனத்துடன் செயற்படுவதற்கும் சகல மீளளிப்புகளையும் பெற்றுக்கொள்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட |

| | | |
|---|---|---|
| மில்லியனும் திறைசேரிக்குக் கிடைக்கப்பெற்றிருந்ததுடன் செலவினத் தகவல்கள் போதாதிருந்தமையாலும் மதிப்பீட்டுப் பெறுமதியானமையாலும் அ.டொ. 32.3 மில்லியன் கொடுப்பனவுகள் மீள்நிரப்புகை நிராகரிக்கப்பட்டுள்ளன. காப்புறுதி நிறுவனத்தால் அமெரிக்க டொலர்களில் செலவுகள் மீளளிப்பிற்காகக் கோரப்பட்டிருந்த போதிலும் காப்புறுதி நிறுவனத்தால் ரூபா 931.8 மில்லியன் ரூபாக்களில் திறைசேரிக்கு மீளளிக்கப்பட்டிருந்தமை சர்ச்சைக்குரியதாகும். | இடைக்கால உரித்தாக காப்புறுதிக் கம்பனிக்கு சமர்ப்பிக்கப்படும். | வேண்டும். மேலும், காப்புறுதி நிறுவனத்தால் அமெரிக்க டொலர்களில் செலவுகள் மீளளிப்பிற்காகக் கோரப்பட்டிருந்த போதிலும் ரூபாக்களில் மீளளிக்கப்பட்டிருந்தமை குறித்து திறைசேரியில் ஆராய்ந்து இதனை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 குறைப்பயன்பாடுடைய நிதியங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபையின் வங்கி நடைமுறைக் கணக்குகளில் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலவிய காசு மீதி ரூபா 290 மில்லியன் தொகையான போதிலும் ஆண்டின் இறுதியில் நிலவிய காசு மீதி ரூபா 364 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. அதிகாரசபையின் வழமையான மாதாந்தக் கொடுப்பனவின் தேவைப்பாட்டைக் கருத்திற்கொண்டு மேலதிக தொகை மிகவும் இலாபகரமான விதத்தில் முதலீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது மிகவும் குறுகிய கால முதலீட்டில் ஈடுபடுத்தப்பட்டு பெற்றுக்கொள்ளக்கூடிய வட்டி வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | இப் பணத்தில் தற்போது ரூபா 100 மில்லியன் அதிகாரசபை நிதியக் கணக்கிற்கும், ரூபா 37.1 மில்லியன் ஊழியர் பணிக்கொடைக் கணக்கிற்கும் செலவு வைக்கப்பட்டு திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக மாதாந்தக் கொடுப்பனவின் திரவத்தன்மை கருத்திற்கொள்ளப்பட்டு ஏனைய பணம் ஒரு மாதகாலமாகக் காணப்பட்ட நாளாந்த அடிப்படையில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | அதிகாரசபையின் வழமையான மாதாந்தக் கொடுப்பனவின் தேவைப்பாட்டைக் கருத்திற்கொண்டு மிகையான தொகை மிகவும் இலாபகரமான நிலையில் முதலீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2011 ஆம் ஆண்டின் போது அனர்த்தத்திற்குள்ளான கப்பலின் மூலம் கிடைக்கப்பெற்ற ரூபா 10 மில்லியன் தொகையான நட்டஈட்டுத்தொகையும் 2022 ஆம் ஆண்டின் போது தக்க வைத்த வருவாயில் இருந்து ரூபா 100 மில்லியன் தொகையும் | அதிகாரசபையின் கட்டணங்கள், தண்டப்பண அறவீடுகள், தண்டனையாகக் கிடைக்கப்பெறும் சகல பணத்தொயைும் இலங்கையில் அல்லது அதற்கு அப்பால் எந்த ஓர் விதத்திலும் கிடைக்கப்பெறும் | 2008 இன் 35 ஆம் இலக்க கடல் மாசடைதலை தடுப்பதற்கான அதிகாரச்சட்டத்தின் 18 (2) ஆம் பிரிவின் படி, அதிகாரசபையின் அதிகாரத்தைப் பயன்படுத்துகையிலும் செயற்பாட்டை |

| | | |
|---|---|---|
| பிடித்துவைக்கப்பட்ட உழைப்புகளின் கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு நிதியத்தின் பெயரிலான கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டு இத் தொகை திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் முதலீட்டு வட்டி சேகரிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் இறுதியில் அந் நிதியத்தின் மீதி ரூபா 119,486,831 ஆகக் காணப்பட்டது.<br>எவ்வாறெனினும், கடல்சார் சுற்றாடல் மாசடைதலைத் தடுப்பதற்காக தொடர்புபடுத்தக்கூடிய பணிகளை இனங்காணப்படாது இந் நிதியம் விளைவற்றுக் காணப்பட்டது. | நலன்களும் அல்லது மானியங்களும் செலவு வைக்கப்படுவதற்காக அதிகாரசபை நிதியம் ஒன்று பயன்படுத்தப்பட வேண்டும்.<br>இதன் படி, பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 10 மில்லியன் தொகையால் இந் நிதியம் ஆரம்பிக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டின் போது தக்க வைத்த வருவாயில் இருந்து ரூபா 100 மில்லியன் நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது. இத் தொகை தற்போது திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளன.<br>ஏதேனுமோர் கடல்சார் சுற்றாடல் மாசடைவு ஏற்படுமாயின் இந் நிதியம் பயன்படுத்தப்படும். | மேற்கொள்கையிலும் பணியை மேற்கொள்கையிலும் அதிகாரசபையால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் ஓர் செலவினத்தை ஏற்பதற்காக தேவையான முழுத் தொகையும் இந் நிதியத்தில் இருந்து செலுத்தப்பட வேண்டும். |

**3.4 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2011 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 672,000 பெறுமதியான ‘‘டிங்கி’’ படகும் 2021 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 255,000 அதிகுளிரூட்டி இயந்திரமும் பாதுகாப்பற்ற முறையில் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது நிறுவனத்தில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தன. | ‘‘டிங்கி’’ படகு இது வரையில் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட இயலாத நிலையில் காணப்பட்ட போதிலும் இதனைக் கைதவிர்ப்புச் செய்வதற்கு (இயந்திரம் தவிர்ந்த) நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இப் படகின் இயந்திரம் மட்டக்களப்பு பிராந்திய அலுவலகத்தின் கள அலுவல்களுக்காக வழங்கப்பட்டுள்ளது.<br>அதிகுளிரூட்டி இயந்திரம் MV X – Press Pearl கப்பல் அனர்த்தத்தை அண்மித்த பகுதிகளில் சேகரிக்கப்படும் நீர் மாதிரிகளை களஞ்சியப்படுத்தும் நோக்கில் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன் நீர் மாதிரிகளை களஞ்சியப்படுத்தும் தேவைப்பாடு ஏற்படாவிடின் இது காலி ஆய்வுகூடத்திற்கு அனுப்பிவைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | இவ் அறிக்கைத் திகதி வரையிலும் கைதவிர்ப்புச் செய்யப்பட்டிராததுடன் உபகரணங்களின் தேவைப்பாடு மற்றும் பயன்பாட்டு இயலுமை தொடர்பாக பரீட்சிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கோ கைதவிர்ப்பதற்கோ அது வரை பாதுகாப்பான முறையில் வைத்திருப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 பெறுகை முகாமைத்துவ்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | MV - X Press Pearl கப்பல் அனர்த்தம் தொடர்பாக ஏற்பட்ட தாக்கத்தை மதிப்பிடும் பணிக்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவில் 45 அங்கத்தவர்களுக்கு 2021 யூன் 12 ஆம் திகதி அதிகாரசபையால் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அக் குழுவில் உள்ளடக்கப்பட்ட நிபுணர்களைத் தேர்ந்தெடுக்கப்பட்ட உசாவுகை வழிகாட்டலின் 3.2 மற்றும் 3.7.1 இன் பிரகாரம் தேர்ந்தெடுத்தல் நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | MV - X Press Pearl கப்பல் அனர்த்தம் ஏற்பட்டதை அடுத்து சட்ட ஆலோசனைகளுக்கு இணங்க அதிகாரசபையால் தேவைக்கேற்ப நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டது. சட்டமா அதிபதியால் சிவில் வழக்கு சிங்கப்பூரில் தொடரப்பட்டதை அடுத்து சட்டமா அதிபதி திணைக்களம் வெளிநாட்டு நிபுணர் உதவியைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுத்திருந்தமையால் தொடர்ந்து நிபுணர் குழு நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை. | உசாவுகை வழிகாட்டல்களுக் கமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | காலி ஆய்வுகூடத்திற்காக 2023 யூலை 31 ஆம் திகதி கட்டளையிடப்பட்டிருந்த ரூபா 1,888,000 பெறுமதியான Analytical Balance உபகரணம் ஒன்று 2024 மார்ச் 11 ஆம் திகதி ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அவ் உபகரணம் மாதிரிகளுக்கு ஒவ்வாமையால் வழங்குனருக்கு மீள ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் இவ் அறிக்கைத் திகதி வரையிலும் மீள ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | இவ் உபகரணத்தின் தரம் பரீட்சிக்கப்படுகையில் முறையாகச் செயற்பட்டிராமை உறுதிசெய்யப்பட்டு குறைபாட்டைச் சீராக்குவதற்கு வழங்குனருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. எனினும், இது வரையில் இதன் குறைபாடுகள் சீராக்கப்படுவதற்கு இந் நிறுவனம் நடவடிக்கை எடுத்திராமையால் அக் கட்டளையை இரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இது வரையில் இந் நிறுவனத்திற்குப் பணம் செலுத்தப்பட்டிராததுடன் எதிர்வரும் பெறுகையின் போது கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டவாறு 8.9.1 மற்றும் 8.9.3 இன் பிரகாரம் எழுத்து மூல உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தயவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். | பெறுகை நடைமுறை வழிகாட்டல்களின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 ஆண்டறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபையின் 2022 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை 2024 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட் டுள்ளது. | பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கைநூலின் 6.6 ஆம் பிரிவின் படி வருடாந்த அறிக்கை கணக்காண்டு முடிவுற்று 05 மாத காலத்திற்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபையின் காலியில் உள்ள ஆய்வுகூடத்திற்காக ISO IEC 17025: 217 தர முகாமைத்துவ முறைமையை ஸ்தாபிப்பதற்காக தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பால் தொழிற்துறை உதவி பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதற்காக 2023 செயல்நடவடிக்கைத் திட்டத்தில் இருந்து ரூபா 760,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் இப் பணி பூர்த்தி செய்யப்பட்டிராமையால் ISO தரக் கட்டுப்பாட்டு சான்றிதழைப் பெற இயலாதிருந்தது. | இதற்கு முக்கிய தடையாக போதிய பதவியணி இன்மை மற்றும் ஆய்வுகூடத்திற்கு ஈடுபடுத்தப்பட்ட பதவியணி அவ்வப்போது விலகியிருந்தமையால் ISO தர முகாமைத்துவ சான்றிதழைப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி பணியைப் பூர்த்திசெய்வதற்கான நடவடிக்கை எடுக்கத்தல் வேண்டும். |